SRI GURUBYO NAMAHA

# Sri Kanchi Kamakodi Peeta Vadamal Bhikshavandanam Trust (Regd)

60, Second Street, Kamdar Nagar, Nungambakkam, CHENNAI-600034.
S.Narayanaswami: Mobile: 9841052523 Email: chitrabala100@gmail.com
M. Chandrasekar : Mobile: 94448 12525 Email: anirsekar@yahoo.com
V.S.Kylas: Mobile: 95000 10467 Email: vskylas@gmail.com
N. Jayasankar : Mobile : 97898 63636 Email : jayashankaran7@gmail.com

## MEMBERSHIP ENROLMENT FORM

| | |
|---|---|
| Name: Sri/Smt. | |
| Door/Flat No & Floor | |
| Plot No. | |
| Flat Name | |
| Street | |
| Area | |
| City / Town | |
| State | |
| Pin | |
| Telephone | |
| Mobile | |
| Email ID | |
| Cheque/DD No. / NEFT DETAILS | |
| Dated | |
| Bank Account Details for Remittance | Name of the Account : SKKPVB Trust<br>Bank Name : Canara Bank<br>IFSC Code of Branch : CNRB0001283<br>Account Number : 0974101019156 |
| Amount – Enrolment Corpus | Rs.3000 (Rupees three thousand only) |
| SIGNATURE | |
| | |

**For Office Use**
Membership No

Receipt No

Date

*PS: Please fillup Mobile Number/Email ID for easy communication*

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் வடமாள் பிக்ஷாவந்தனம் டிரஸ்ட் (Regd)

நெ. 60, காம்தார் நகர் 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
M CHANDRASEKAR - 94448 12525, S NARAYANASWAMY - 98410 52523, N JAYASANKAR - 97898 63636

ஸ்ரீ குருப்யோ நம:

ஆத்ம ஞானத்தில் ஈடுபடும் ஸன்யாஸிகள், வியாஸ பௌர்ணமி அன்று ஸ்ரீ வியாஸ பகவானையும் தங்களது குரு பரம்பரையில் தோன்றிய குருவரர்களையும் பூஜிக்கும் உன்னதமான வைபவம், பக்தகோடிகளும் இதை மனதில் கொண்டு, "எங்களால் இயன்ற பிக்ஷாவந்தனாதி ஸகல ஸுஷ்ரூஷைகளை செய்கின்றோம். தாங்கள் ஓரிடத்திலேயே தங்கியிருந்து இந்த சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அனுஷ்டித்து எங்களை அனுக்ரஹிக்க வேண்டும்" என்று ப்ரார்த்திக்கிறார்கள். இதை ஏற்று யதிகள் ஓரிடத்தில் தங்குவர், இந்த காலத்தில் வேதாந்த கிரந்தங்களை போதித்தும், சாஸ்திர விசாரங்கள் நடத்தியும் வியாஸ பூஜைக்கு பெருமை சேர்க்கிறார்கள். நமது ஸ்ரீ மடத்தின் முகாமில் த்ரிகால பூஜை வழக்கம்போல விமர்சையாக நடக்கும்.

இவ்வைபவமானது இந்த பராபவ வருடத்தில் காஞ்சிபுரம் அருகிலுள்ள ஓரிக்கையில் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ஸதாப்தி மணிமண்டபத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வர ஸ்வாமி பூஜை மண்டபத்தில் ஸ்ரீ வ்யாஸ பூஜையையும் மற்றும் சாதுர்மாஸ்ய வ்ரதத்தையும் 29.07.2026 முதல் 26.09.2026 வரை மூலாம்னாய ஸர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 70 வது ஜகத்குரு ஸங்கராச்சார்ய ஸ்வாமிகள் பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களும், 71வது ஆசார்யாள் ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஸத்ய சந்திரஸேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களும் அனுஷ்டிக்கிறார்கள்.

பராபவ வருஷத்திய சாதுர்மாஸ்ய பூஜை காலத்தில் நமது டிரஸ்ட்டின் பிக்ஷாவந்தனம் ஆடி மாதம் 30–ஆம் தேதி சனிக்கிழமையன்று (15–8–2026) நடைபெற ஆசார்ய ஸ்வாமிகளிடமிருந்து உத்தரவாகியுள்ளது, ஆகவே இந்த புண்ணிய காலத்தில் ஸந்யாஸிகளுக்கு பிக்ஷாவந்தனம் மற்றும் பாத பூஜை செய்வது ஸகல விதமான ஸ்ரேயஸ்ஸை அளிக்க வல்லதாகும். பிக்ஷா வந்தன தினத்தில் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வரரின் சன்னிதியில் ஸமஷ்டியாக சங்கல்பம் செய்துகொள்வது என்பது உத்தம வைபவம். குருவின் நல்லாசிகளும், அருளும் பெருகும். நமது அங்கத்தினர்கள் தங்கள் குடும்பத்துடன் தவறாமல் பெருமளவில் கலந்து கொண்டு குருவருளைப் பெற வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

நமது பிக்ஷாவந்தன டிரஸ்ட் கடந்த சாதுர்மாஸ்ய காலங்களில் பெரியவாளின் ஆக்ஞையின்படி வெள்ளியில் பூஜை மண்டபம், பூஜைகளுக்கு தேவையான பொருட்களை ஸமர்ப்பணம் செய்து பெரியவாளின் அனுகிரகங்களைப் பெற்றது அங்கத்தினர்களின் பாக்கிய மாகும்.

இந்த சாதுர்மாஸ்ய ஸம்வஸ்தரத்திலும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜைக்கு தேவையான வஸ்த்துக்களும் வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. நிலவி வரும் விலைவாசியில், சாதுர்மாஸ்ய பூஜைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வஸ்த்துக்களின் செலவுகள் உத்தேசமாக ரூ.20 லட்சம் ஆகுமென கருதப்படுகிறது. இதை மனதில் கொண்டு நமது வடமாள் பிக்ஷா வந்தன ட்ரஸ்ட் அங்கத்தினர்களின் தொடர்ந்த த்ரவ்ய ஆதரவு, உற்சாகம் ஒத்துழைப்பின் மூலமே இது சாத்தியமாகக்கூடும் என்பதும் அங்கத்தினர்கள் அறிந்ததே. எனவே நமது டிரஸ்ட் அங்கத்தினர்கள் அனைவரும் தங்களாலியன்ற காணிக்கையை தாராளமாக அவசியம் கொடுத்து ஒவ்வொரு சாதுர்மாஸ்ய பூஜையும் நமது மனதை விட்டு அகலாத நினைவாக செய்து ஸ்ரீ ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீ புது பெரியவாள் ஆசீர்வாதத்தினையும் ஸ்ரீ ஸ்ரீ பெரியவர்கள் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாத்ரிபுரசுஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர ஸ்வாமியின் அனுக்கிரஹம் பெற்று மேன்மேலும் சிரேயஸை அடைய பிரார்த்திக்கிறோம். பணம் அனுப்பவேண்டிய வங்கி விவரங்கள் அங்கத்தினர் படிவத்தில் உள்ளன.

நமது ட்ரஸ்டின் மடத்திற்கான சேவை மேலும் மேலும் தொடர, புதிய அங்கத்தினர்களை சேர்ப்பதற்கான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நமது உறுப்பினர்கள் புதியவர்களை (வடமாள் நண்பர்கள் மற்றும் உறவினர்களை) ரூபாய் 3,000 செலுத்தி அங்கத்தினராக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இது ஒரு வலிமையான கட்டமைப்பை உருவாக்குவதுடன் வருங்கால ஸந்ததிகள் எப்பொழுதும் பூஜைகளை தொடர மற்றும் ஸ்ரீ ஸ்ரீ பெரியவர்களின் குருவருளையும் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாத்ரிபுரசுஸுந்தரி ஸமேத ஸ்ரீ ஸ்ரீ சந்தரமௌலீஸ்வரர் அனுகிரஹம் பெற்றுய்ய வேண்டியும் உதவும்.

தங்கள்
**டிரஸ்ட் நிர்வாகிகள்**